



## மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்

## (DTCP) தருமபுரி மாவட்டம்

தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம் / கடத்தூர் ஊராட்சி ஒன்றியம், நல்லகுட்லஅள்ளி ஊராட்சி மற்றும் கிராமம், ச.எண்கள்: **146/1C1** -ல் அமையும் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம். (திட்டமில்லா பகுதி)

இணையதள விண்ணப்ப எண் :5PRYWW9R

அளவு : 1 செ.மீ : 4 மீ (அளவுகள் மீட்டரில்)

வ

**குறிப்பு:**

| | |
|---|---|
| மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு | : 0.20.25 ஹெக்டேர் (அ) 0.50 ஏக்கர் |
| கோரிய மனைகள் | : 11 |
| ஒதுக்கிய மனைகள் | : 10 |
| மனைப்பிரிவின் எல்லை | |
| நிலையிலுள்ள அணுகு சாலை | |

I) பொது ஒதுக்கீடுகள்:உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டது:

i) மனைப்பிரிவின் சாலை மற்றும் மூலைமுடக்குகளின் பரப்பு : 580.28 ச.மீ

II) பூங்கா(OSR):

i) ஒதுக்கப்பட வேண்டிய பூங்கா (OSR) பரப்பு } (மனைப்பிரிவு பரப்பு - மனைப்பிரிவு சாலை பரப்பு) x 10 %
(2025.00 - 580.28 = 1444.72) x 10 % = 144.47 ச.மீ

ii) ஒதுக்கப்பட்ட பூங்கா (OSR) பரப்பு } 144.47 ச.மீ (10.00 %) (பூங்கா பரப்பிற்கு ஈடான அரசு வழிகாட்டி மதிப்பின் படி உரிய தொகை செலுத்தப்பட்டது)

III) பொது உபயோகம்:

A) LOCALBODY -க்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு } (மனைப்பிரிவு பரப்பு - மனைப்பிரிவு சாலை பரப்பு) x 0.5 %
(2025.00 - 580.28) x 0.5 % =7.22 சதுர.மீட்டர்

ஒதுக்கப்பட்ட பரப்பு : 9.00 சதுர.மீட்டர் (0.62 %)

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு தானமாக ஒப்படைக்கப்பட்டது:

B) TANGEDCO -க்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு } (மனைப்பிரிவு பரப்பு - மனைப்பிரிவு சாலை பரப்பு) x 0.5 %
(2025.00 - 580.28) x 0.5 % =7.22 சதுர.மீட்டர்

ஒதுக்கப்பட்ட பரப்பு : 9.00 சதுர.மீட்டர் (0.62 %)

கட்டிட வரம்பு :

9.00 மீ வரை அகல உள்ள சாலைகளுக்கு 1.50 மீ விடப்படல் வேண்டும்.

9.00 மீக்கு மேல் 18.00 மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 3.00 மீ விடப்படல் வேண்டும்.

மூலை முடக்கு:

12.00 மீ வரை அகல உள்ள சாலைகளுக்கு 1.50 மீ x 1.50 மீ விடப்படல் வேண்டும்.

12.00 மீக்கு மேல் 30.00 மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 4.50 மீ x 4.50 மீ விடப்படல் வேண்டும்.

**நிபந்தனைகள்:**

1. அரசாணை எண்-18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்-04.02.2019, அரசாணை எண்-16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்-31.01.2020 அரசாணை எண்-181, வீட்டுவசதி (ம) நகர்புற வளர்ச்சித்துறை நாள்-09.12.2020-ன் படி சாலைகள் (மூலைமுடக்குகள் உட்பட) மற்றும் 0.5% பரப்பு A) LOCALBODY-க்கும், 0.5% பரப்பு உள்ளாட்சி அல்லது B) TANGEDCO-க்கும் தானமாக பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
2. அரசாணை எண். 181 வீட்டு வசதி மற்றும் நகர்புறவளர்ச்சித் துறை நாள்: 09.12.2020-ன் தெரிவித்துள்ளவாறு உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தேவையான தார் சாலை வசதி, மழைநீர் வடிகால் வசதி, மேல்நிலை நீர்தேக்க தொட்டியுடன் கூடிய குடிநீர் வசதிகள் (ம) தெருவிளக்கு வசதி மற்றும் இதர வசதிகள் ஆகிய அடிப்படை வசதிகள் மனுதாரரால் அமைக்கப்பட்ட பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கப்பட வெண்டும்.
3. அரசாணை எண். 141 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்: 16.07.2022-ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
4. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்க்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும், சம்மந்தப்பட்ட உள்ளாட்சியால் உறுதி செய்து கொள்ளப்பட வேண்டும்.
5. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
6. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வரைபட நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகலினை மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
7. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலின்றி மனைப்பரிவு நுழைவாயிலில் 6' x 4' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
8. நகர் ஊரமைப்பு துறை சட்டபூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதின் முலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில்நுட்ப அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் ( கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம், மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கபடுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கபடுகிறது. சொத்தினை வாங்க விரும்பும் எந்த ஒரு நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
9. உத்தேச மனைப்பிரிவு சாலைகளுக்கு மனுதாரரால் தார் சாலை அமைக்கப்பட்டு (BDO/UE) வட்டார வளர்ச்சி அலுவலர்/ யூனியன் பொறியாளர் அவர்களிடம் தரம் குறித்து தகுதிச்சான்று பெறப்பட்ட பின்னர் உள்ளாட்சியில் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
10. பிரஸ்தாப மனைப்பிரிவிற்கு இவ்வலுவலகத்தால் தொழில்நுட்ப ஒப்புதல் மட்டுமே வழங்கப்படுகிறது. மனுதாரரின் நில உரிமத்தினை உறுதி செய்த பின்னரே உள்ளாட்சியில் இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.
11. பிரஸ்தாப மனைப்பிரிவு அமையும் இடம் குறித்து நீதிமன்ற வழக்கு ஏதும் நிலுவையில் உள்ளது என அறியப்படின் இவ்வுத்தரவு செல்லதக்கதல்ல.
12. மனைப்பிரிவினை சுற்றி மனுதாரரால் சுற்றுசுவர் (COMPOUND WALL) அமைக்கப்பட்டிருப்பின் அதனை அகற்றி அருகிலிருக்கும் இடத்திற்கு இணைப்புபாதை அமையும் வகையில் சுற்றுசுவர் இடித்து அப்பறப்படுத்தப்பட வேண்டும்.
13. மனைப்பிரிவின் ஊடே குறைந்த அழுத்த மற்றும் உயர் அழுத்த மின்கம்பிபாதை ஏதேனும் செல்லுமாயின் அதனை சாலையின் போக்கிற்கு ஏற்றவாறு மனுதாரர் தனது சொந்த செலவில் மாற்றி அமைக்கப்பட்ட பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.
14. மனைப்பிரிவின் ஊடே நீர் நிலை ஏதேனும் அமையுமாயின் அதற்கு பாதிப்பு ஏற்படாத வண்ணம் மனைப்பிரிவு அமைக்கப்பட வேண்டும். இதனை உள்ளாட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும்.
15. மனைப்பிரிவு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் பெற்ற பின்பு அரசாணை எண். 112 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்: 22.06.2017-ன் படி RERA அனுமதி பெற்று பத்திரபதிவு செய்யப்பட்டவேண்டும்.

**SWP/DTCP/DHARMAPURI/LAYOUT APPROVAL NO:22/2025**

செ.ரமேஷ் குமார்
அளவர்/உதவி வரைவாளர்

Signature Not Verified
Signed by Assistant Director
Location:Dharmapuri
Date:2025.03.06 16:12

செ.அருண்பாண்டியன்
வரைவாளர் நிலை-III

சா.பத்மநாபன்
மேற்பார்வையாளர் /
வரைவாளர் நிலை-II

உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
தருமபுரி மாவட்டம்.